JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 279/2019 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | செந்தூர்பாண்டி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 02.04.2026

முதல் விசாரணை

நான் தற்போது புன்னையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி தர்மர் என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2019 ம் வருடம் புன்னையாபுரம் ரோட்டில் வைத்து போலிசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் செய்து கொடுத்தேன். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

அசா.1 சட்டநாதன் என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் ஊர்க்காரர். போலிசார் விசாரணையின் போது கடந்த 30.03.2019 ம் தேதியன்று 18.30 மணிக்கு நானும், சாட்சி தருமர்

என்பவரும் வழக்கின சம்பவ இடம் அருகே பேசிக்கொண்டிருந்தபோதுஅங்கு வந்த சொக்கம்பட்டி காவல் உதவி ஆய்வாளர் சொக்கம்பட்டி காவல்நிலைய குற்ற எண் 75/2019 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், தர்மரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து கொண்டு இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi